**மே – 24**

# TNPSC துளிகள்

- இந்தியக் கடலோர காவல்படையானது (ICG), ஒடிசாவில் அதன் ஒலிவியா நடவடிக்கை என்பதின் கீழ், சுமார் 6.98 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆலிவ் ரெட்லி / சிற்றாமைகளை வெற்றிகரமாகப் பாதுகாத்துள்ளது.
- LGBTQ உரிமை மீறல்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், உலகளவில் LGBTQ உரிமைகள் பணிகளில் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகவும், மே 17 ஆம் தேதி அன்று சர்வதேச ஹோமோஃபோபியா, பைஃபோபியா மற்றும் டிரான்ஸ்ஃபோபியா ஆகியவற்றின் எதிர்ப்பு தினம் (IDAHOBIT) அனுசரிக்கப்படுகிறது.
- நட்பு, ஒற்றுமை, சகிப்புத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் பாகுபாடின்மை போன்ற பல தன்மைகளோடு விளையாட்டுப் போட்டிகளை நடத்த ஊக்குவிப்பதற்காக, 2025 ஆம் ஆண்டு மே 19 ஆம் தேதியன்று முதலாவது உலக அளவில் நியாயமான முறையிலான விளையாட்டுத் தினம் அனுசரிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சதுப்புநிலக் காடுகள் - பக்கிங்ஹாம் கால்வாய்




- பல ஆண்டுகளாக, கிழக்குக் கடற்கரைச் சாலையில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் ஆனது புறக்கணிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு இனங்களின், மிக குறிப்பாக ப்ரோசோபிஸ் ஜூலிஃப்ளோராவின் ஊடுருவல் மற்றும் பரவலால் பாதிக்கப்பட்டது.
- தற்போது, தமிழ்நாடு மாநில வனத்துறையானது இந்தக் கால்வாயின் ஒரு பகுதியை மீட்டெடுப்பதற்கான ஒரு முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இது அதன் விளிம்போரப் பகுதிகளில் உள்நாட்டுச் சதுப்புநில இனங்களின் பசுமைப் மண்டலத்தினை நிறுவ உள்ளது.
- சென்னையில் கழிப்பட்டூரில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் அருகே புதிய சதுப்பு நிலக் காடு உருவாக்கியுள்ளது.
- தமிழ்நாடு மாநில வனத் துறையானது பசுமை தமிழ்நாடு திட்டத்தின் கீழ், கடந்த ஆண்டு பல்வேறு இனங்களிலிருந்து 12,500 சதுப்புநில செடிகளின் நாற்றுகளை நட்டது.

- இதில் உவர்தன்மைக்கான சகிப்புத் தன்மை கொண்ட 6 இனங்களான - ரைசோபோரா முக்ரோனேட்டா, ப்ருகுயேரா சிலிண்ட்ரிகா, அவிசென்னியா மெரினா, ஏஜிசெராஸ் கார்னிகுலட்டம், எக்ஸ்கோகேரியா அகல்லோச்சா, அகந்தஸ் இல்லிசிஃபோலியஸ் - ஆகியவை அதில் அடங்கும்.

## தமிழ்நாட்டின் அருகி வரும் உயிரின நிதி குறித்த புதிய தகவல் 2025





- 2024 ஆம் ஆண்டில் 50 கோடி ரூபாய் ஆரம்பக் கட்ட நிதியுடன் தமிழ்நாடு அருகி வரும் உயிரின வளங்காப்பு நிதியானது அறிவிக்கப்பட்டது.
- இது ஆரம்பத்தில் மாநில வன மேம்பாட்டுத் நிறுவனத்தினால் (SFDA) நிர்வகிக்கப்பட திட்டமிடப்பட்டது.
- தமிழ்நாடு வனத்துறையின் இந்தத் திட்டம் தடைபட்ட பிறகு, இந்த நிதியை வேறு நிறுவனம் மூலம் திருப்பி விட முடிவு செய்யப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்த நிதிக்கான மேலாண்மை நிறுவனமாக SFDA நியமிக்கப் பட்டது.
- இது ஆரம்பத்தில் முதுமலை புலிகள் வளங்காப்பக அறக்கட்டளையின் மூலமாக மேற் பார்வையிடப் பட இருந்தது.
- மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்யப்படும் வரை 50 கோடி ரூபாய் நிதியை தமிழ்நாடு மின் நிதிக் கழகம் அல்லது தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதிக் கழகம் தன் மேற்பார்வையின் கீழ் வைத்திருந்தது.
- இந்த நிதியை நிர்வகிக்கும் பொறுப்பை வண்டலூரில் உள்ள மேம்பட்ட வனவிலங்கு வளங்காப்பு நிறுவனத்திற்கு (AIWC) மாற்றுவதற்கு வனத்துறை தற்போது முடிவு செய்து உள்ளது.
- சமீபத்தில் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள இது வனவிலங்கு வளங்காப்பில் ஆராய்ச்சி மற்றும் முன்னெடுப்புகளுக்குப் பெயர் பெற்ற ஒரு நிறுவனமாகும்.
- இந்த மாநிலத்தில் அருகி வரும் உயிரினங்கள் குறித்த ஒரு ஆராய்ச்சிக்கான மானிய திட்டங்களை AIWC ஈர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- சலீம் அலியின் பழம் உண்ணும் வௌவால், மலபார் புனுகுப் பூனை, வெண் முதுகுக் கழுகு, நீலகிரி மருதத் தவளை, வெண்புள்ளிப் புதர்த் தவளை மற்றும் ஆனைமலை பறக்கும் தவளை ஆகியவை இதில் அடங்கும்.

# தேசியச் செய்திகள்

## e-Zero FIR முன்னெடுப்பு




- இந்திய இணையவெளிக் குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C) ஆனது, டெல்லியில் ஒரு சோதனை /முன்னோடித் திட்டமாக புதிய e-Zero FIR என்ற முன்னெடுப்பினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது, 1930 உதவி எண் மூலமாக அல்லது cybercrime.gov.in என்ற வலை தளத்தில் பதிவு செய்யப்படும் நிதி சார் இணையவெளிக் குற்றப் புகார்களை தானாகவே முதல் தகவல் அறிக்கைகளாக (FIR) மாற்றும்.
- தற்போது இது 10 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான தொகை சம்பந்தப்பட்ட நிதி சார் மோசடிகளுக்கும் பொருந்தும்.
- இந்த அறிக்கைகள் உடனடியாக அந்தந்தப் பிராந்திய இணையவெளிக் குற்ற காவல் நிலையங்களுக்கு அனுப்பப்படும்.
- பின் புகார்தாரர்கள் 3 நாட்களுக்குள் இணையவெளிக் குற்றக் காவல் நிலையத்திற்குச் சென்று, e-Zero FIR அறிக்கைகளை வழக்கமான FIR ஆக மாற்றலாம்.
- டெல்லியின் e-Crime காவல் நிலையம் ஆனது e-FIR பதிவுக்கான மையமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

## வடகிழக்குப் பகுதிக்கான புதிய கடல் பாதை

- தற்போது முன்மொழியப்பட்ட ஷில்லாங் (மேகாலயா மாநிலம்) - சில்சார் (அஸ்ஸாம்) நெடுஞ்சாலையானது மியான்மரில் முக்கியப் பல்நோக்குப் போக்குவரத்து திட்டத்தின் தொடர்ச்சியாக செயல்படும் என்று கூறப்படுகிறது.


- இது வங்காளதேசத்தைத் தவிர்த்து, வடகிழக்கு மற்றும் கொல்கத்தா இடையேயான புதிய கடல் சார் பாதையை வழங்குகிறது.
- இந்த வழித்தடமானது, மியான்மர் நாட்டில் உள்ள கலாதான் பல்நோக்கு இடைவழி போக்குவரத்துத் திட்டத்துடன் இணைக்கும்.
- இது கொல்கத்தா கடல் சார் துறைமுகத்தை மியான்மரின் ரக்கைன் மாகாணத்தின் கலாதான் ஆற்றில் உள்ள சிட்வி துறைமுகத்துடன் இணைக்கிறது.
- இதில் சிட்வி என்ற துறைமுகமானது, உள்நாட்டு நீர்வழி மூலமாக மியான்மரில் உள்ள பலேத்வாவுடனும், சாலை வழியின் மூலமாக மிசோரமில் உள்ள சோரின்புய் உடனும் இணைகிறது.
- இதில் சில்சார் ஆனது மிசோரம், திரிபுரா மற்றும் மணிப்பூர் மற்றும் அசாமின் பராக் பள்ளத்தாக்குப் பகுதியை இணைப்பதற்கான ஒரு நுழைவுப் பகுதியாக இருப்பதால் ஷில்லாங் - சில்சார் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- இதில் மேகாலயாவில் ஷில்லாங்கிற்கு அருகிலுள்ள மவ்லிங்க்குங்கிலிருந்து அசாமில் சில்சார் அருகே உள்ள பஞ்ச்கிராம் வரையில் 6வது தேசிய நெடுஞ்சாலையில் சுமார் 166.8 கிலோ மீட்டர் நீளமுள்ள, 4 வழி, அதிவேக வழித்தடத்தினை கட்டமைக்க மத்திய அரசு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.




## 3 புதிய பயிர் வகைகள்


- பனாரஸ் இந்து பல்கலைக்கழகமானது (BHU) உருவாக்கிய மூன்று பயிர் வகைகள் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன / அறிமுகப் படுத்தப்பட்டன.
- இவற்றில் இரண்டு வகையான அரிசி வகைகள் மற்றும் ஒரு வகை கடுகு ஆகியவை அடங்கும்.
- மாளவியா மணிலா சிஞ்சித் தான்-1 ஆனது BHU மற்றும் IRRI ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப்பட்டது.
- இந்த வகையானது குறுகிய காலத்தில் (115 முதல் 120 நாட்கள்) முதிர்ச்சியடைந்து, ஒரு ஹெக்டேருக்கு 55 முதல் 60 குவிண்டால் வரை மிக அதிக மகசூலை அளிக்கிறது.
- இதில் மாள்வியா தான் 105 துணை-1 அரிசி வகையானது முந்தைய மாள்வியா தான் 105 வகையின் ஒரு மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- மாள்வியா நிதி எனும் கடுகு வகையானது 125 முதல் 130 நாட்களில் முதிர்ச்சியடைந்து,

ஒரு ஹெக்டேருக்கு என சராசரியாக 20 குவிண்டால் மகசூல் அளிக்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## சிங்கங்கள் கணக்கெடுப்பு 2025




- குஜராத்தின் 11 மாவட்டங்களில் 16வது ஆசிய சிங்கக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, குஜராத்தில் உள்ள ஆசிய சிங்கங்களின் எண்ணிக்கையானது 674 லிருந்து 891 ஆக உயர்ந்துள்ளது.
- தற்போது புதிய புள்ளிவிவரங்கள் ஆனது கடந்த ஐந்து ஆண்டுகளில் 217 சிங்கங்களின் அதிகரிப்பைக் குறிக்கின்றன அல்லது அவற்றின் எண்ணிக்கையில் சுமார் 32 சதவீதத்திற்கும் அதிகமான அதிகரிப்பினைக் குறிக்கின்றன.
- கடைசி கணக்கெடுப்பானது 2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- ஒரு தனித்துவமான துணை இனமான ஆசிய சிங்கங்கள் குஜராத்தின் கிர் தேசியப் பூங்கா மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

- கிர் வனவிலங்குச் சரணாலயம் மற்றும் பானியா வனவிலங்குச் சரணாலயம் ஆகியன இதன் பெரும்பான்மை எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.
- அமெரேலி மாவட்டம் 257 சிங்கங்களுடன் அதிக எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.
- போர்பந்தர் அருகே பர்தா வனவிலங்குச் சரணாலயம் சிங்க வசிப்பிடத்தைக் கொண்ட ஒரு புதிதாக நிறுவப் பட்டப் பகுதியாக மாறியுள்ளது.
- எனவே இது சிங்கங்களுக்கான இரண்டாவது வசிப்பிடமாக மாறியுள்ளது.
- 1879 ஆம் ஆண்டிற்குப் பிறகு இதுவே முதன் முறையாகும்.
- 2025 கணக்கெடுப்பானது ஜெட்புர் மற்றும் பாப்ரா-ஜஸ்தான் ஆகிய பகுதிகளின் அருகே ஒரு புதிய தொலைதூர அளவிலான எண்ணிக்கைகளைக் கொண்டுள்ளது.
- இந்த வருடக் கணக்கெடுப்பானது இரண்டு வருடங்களாக நடத்தப் படுகின்ற புலிகள் கணக்கெடுப்பினைப் போலல்லாமல் வெறும் மூன்று நாட்களில் நடத்தி முடிக்கப் பட்டது.

## யூதாலியா மலாக்கானா வண்ணத்துப்பூச்சி

- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் லெபராடா என்ற ஒரு மாவட்டத்தில் 'யூதாலியா மலாக்கானா' என்ற புதியதொரு வண்ணத்துப்பூச்சி இனமானது முதன்முறையாகப் பதிவு செய்யப் பட்டு உள்ளது.
- இந்த வண்ணத்துப் பூச்சியானது, வடக்குத் தாய்லாந்து, மலாய் தீபகற்பம் மற்றும் சுண்டா தீவுகளில் பதிவாகியுள்ளதுடன், மிக முதன்மையாக தென்கிழக்கு ஆசியாவில் காணப் படுகிறது.
- இந்த இனத்தைச் சேர்ந்த சுமார் ஐந்து வண்ணத்துப் பூச்சிகள் 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சராசரி கடல் மட்டத்திலிருந்து 685 மீட்டர் உயரத்தில் உள்ள பகுதியில் பதிவு செய்யப் பட்டன.



# முக்கிய தினங்கள்


## கடல்சார் துறையில் உள்ள பெண்களுக்கான சர்வதேச தினம் 2025 - மே 18

- இது கடல்சார் துறையில் பெண்களின் ஆட்சேர்ப்பு, தக்க வைப்பு மற்றும் நிலையான வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கடல்சார் துறையில் பெண்கள் என்ற பதமானது கப்பல் போக்குவரத்து, துறைமுகச் செயல்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புடையத் தொழில்துறைகளின் அனைத்து அம்சங்களையும் குறிக்கிறது.

- தற்போது, உலகளாவிய கடல்சார் பணியாளர்களில் 2% மட்டுமே பெண்கள் உள்ளனர் மற்றும் கடற்கரை சார்ந்த கடல்சார் பணியாளர்களில் சுமார் 20% மட்டுமே பெண்கள் உள்ளனர்.
- 2015 ஆம் ஆண்டில் 1,699 ஆக இருந்த இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கடல்சார் பெண் பணியாளர்கள் 2024 ஆம் ஆண்டில் 14,255 ஆக அதிகரித்துள்ளனர்.
- "Women in Maritime: Leading Transformation and Sustainability" என்ற ஒரு கருத்துருவின் கீழ் இந்தியா இந்த நாளைக் கொண்டாடியது.




## உலக தேனீக்கள் தினம் 2025 - மே 20





- நமது சுற்றுச்சூழல் அமைப்புகளை மிகவும் வளமாக வைத்திருப்பதிலும் உணவுப் பாதுகாப்பை நன்கு உறுதி செய்வதிலும் தேனீக்கள் மற்றும் பிற மகரந்தச் சேர்க்கை இனங்கள் வகிக்கும் அத்தியாவசியப் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்லோவேனியா நாட்டினைச் சேர்ந்த தேனீ வளர்ப்பவரான அன்டன் ஜான்சாவின் பிறந்த நாளினைக் கௌரவிக்கும் வகையில்

இந்தத் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

- அவர் நவீன தேனீ வளர்ப்புத் துறையில் முன்னோடியாகக் கருதப்படுகிறார்.
- ஸ்லோவேனியாவானது இந்த முன்னெடுப்பினை மேற்கொண்டதையடுத்து, 2017 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- இந்த ஆண்டின் கருத்துரு "Bee inspired by nature to nourish us all" என்பதாகும்.

## தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம் 2025 - மே 21




- இது இந்தியாவின் இளம் பிரதமரான இராஜீவ் காந்தி 1991 ஆம் ஆண்டு சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூரும் நாள் ஆகும்.
- தீவிரவாதத்தின் தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும், பல்வேறுப் பொது நிகழ்வுகள் மூலம் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அப்போதைய அரசாங்கமானது, 1992 ஆம் ஆண்டில் இந்த நாளைக் கடைப்பிடிக்க முடிவு செய்தது.

# இதரச் செய்திகள்

## K. வீராசாமி வழக்கின் தீர்ப்பு - 1991

- K. வீராசாமி எதிர் இந்திய ஒன்றியம் ஆகியோருக்கு இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய 1991 ஆம் ஆண்டு தீர்ப்பை மறுபரிசீலனை செய்வது குறித்து துணைக் குடியரசுத் தலைவர் சமீபத்தில் தனது கருத்தைத் தெரிவித்துள்ளார்.
- குப்புசாமி நாயுடு வீராசாமி 1941 ஆம் ஆண்டில் சென்னை வழக்கறிஞர் சங்கத்தில் சேர்ந்து தனது சட்டப் பயிற்சியைத் தொடங்கினார்.
- அவர் 1953 ஆம் ஆண்டில் அரசு உதவி வழக்கறிஞராகவும் 1959 ஆம் ஆண்டில் அரசு வழக்கறிஞராகவும் நியமிக்கப்பட்டார்.
- 1969 ஆம் ஆண்டு மே 01 ஆம் தேதியன்று, அவர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி

ஆனார்.

- 1976 ஆம் ஆண்டில், மத்தியப் புலனாய்வுத் துறை 1947 ஆம் ஆண்டு ஊழல் தடுப்பு (PC) சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்களுக்காக அவருக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்தது.
- அவர் மீது தொடங்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்ய அவர் 1978 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.
- 1979 ஆம் ஆண்டில், சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு (மூன்று நீதிபதிகள் கொண்ட) ஆனது 2-1 பெரும்பான்மை தீர்ப்பில் விசாரணையை ரத்து செய்ய மறுத்து விட்டது.
- நீதிபதி வீராசாமி பின் மேல்முறையீடு மூலம் உச்ச நீதிமன்றத்தை நாடினார் என்ற ஒரு நிலையில் அது இறுதியாக 1991 ஆம் ஆண்டில் இந்த விவகாரம் குறித்து முடிவு செய்தது.
- 1947 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ், உயர் நீதிமன்ற நீதிபதி அல்லது உச்ச நீதிமன்ற நீதிபதி ஒரு "அரசு ஊழியரா இல்லையா" என்பதை உச்ச நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியிருந்தது.
- குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர்களைப் போலல்லாமல், அரசியலமைப்பின் கீழ் உயர் நீதித்துறை நீதிபதிகளுக்கு எந்த விலக்குரிமையும் இல்லை என்று அரசாங்கத் தரப்பு வாதிட்டது.
- 3-2 என்ற பெரும்பான்மை தீர்ப்பில், ஒரு நீதிபதி மீது ஊழல் வழக்கு பதிவு செய்வதற்கு, அவர் அரசு ஊழியராகக் கருதப்படலாம் என்றாலும், அதற்கான அனுமதி இந்தியத் தலைமை நீதிபதியிடமிருந்து பெறப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது.
- 2019 ஆம் ஆண்டில், முதன்முறையாக, அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதியான S.N. சுக்லாவுக்கு எதிராக FIR பதிவு செய்வதற்காக என்று அப்போதைய இந்தியத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் CBI துறைக்கு அனுமதி அளித்தார்.
- நீதிபதி கோகோய்க்கு முந்தைய இந்தியத் தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ரா, நீதிபதி சுக்லாவைப் பதவி நீக்கம் செய்ய வேண்டிப் பரிந்துரைத்தாலும், அரசாங்கம் அந்தப் பரிந்துரை குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★